**சுருக்கம்**

பழங்குடியினர் மேம்பாடு – 2021 – 2022 ஆம் ஆண்டு விரிவான பழங்குடியின மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆனைக்கட்டி, கூடலூர், கொல்லிமலை ஆகிய 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்கு ரூ.6,35,84,000/- – நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் ப.மே1(2)] துறை**

**அரசாணை (ப) எண். 24** **நாள் 22.02.2022**

மாசி மாதம் 10-ஆம் நாள்,
பிலவ வருடம்,
திருவள்ளுவர் ஆண்டு 2053

**படிக்கப்பட்டது :-**

1. அரசாணை (நிலை) எண்.44, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (பமே1(2)) துறை, நாள் 16.03.2020
2. அரசாணை (நிலை) எண்.93, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (பமே1(2)) துறை, நாள் 05.09.2020
3. பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். பமே/ அ3/957/2012, நாள் 11.10.2021 மற்றும் 23.12.2021.

*******

**ஆணை :-**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், ஆனைக்கட்டி, கூடலூர், ஜமுனமரத்தூர் ஆகிய 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்காக ரூ.3,84,62,000/- (ரூபாய் மூன்று கோடியே எண்பத்து நான்கு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரம் மட்டும்) கீழ்க்கண்டவாறு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து அரசால் ஆணையிடப்பட்டது.

| வ. எண் | ITI தொழிற்பயிற்சி நிலையங்கள் | கூடுதல் ஒதுக்கீடு தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1 | ஆனைக்கட்டி | 1,49,87,000/- |
| 2 | கூடலூர் | 1,67,35,000/- |
| 3 | ஜமுனமரத்தூர் | 67,40,000/- |
| | **மொத்தம்** | 3,84,62,000/- |

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை அரசு தொழிற்பயிற்சி நிலைய கட்டிடம் கட்டுவதற்கு கூடுதல் தொகையாக ரூ. 5,72,00,000/- (ரூபாய் ஐந்து கோடியே எழுபத்து இரண்டு இலட்சம் மட்டும்) 2020-2021-ஆம் ஆண்டிற்கான விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து அரசால் ஆணையிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதத்தில், அரசாணை (நிலை) எண்.44, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (பமே1(2)) துறை, நாள் 16.03.2020 மற்றும் அரசாணை (நிலை) எண்.93, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (பமே1(2)) துறை, நாள் 05.09.2020-இன்படி ஆனைக்கட்டி, கூடலூர், ஜமுனாமரத்தூர், கொல்லிமலை ஆகிய 4 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்கான மொத்த செலவினத் தொகை ரூ.9,56,62,000/- (ரூபாய் ஒன்பது கோடியே ஐம்பத்து ஆறு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரம் மட்டும்) விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்றும், முதன்மை தலைமை பொறியாளர் (கட்டிடம்), பொதுபணித்துறை கடிதத்தில் கட்டிட வேலைகளுக்கான செலவினம் 31.03.2021 வரை ரூ. 3,20,70,000/- (ரூபாய் மூன்று கோடியே இருபது இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) கீழ்கண்டவாறு செலவிடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

| Name of Work | Already sanctioned amount (Rupees in thousands) | Expenditure upto 31.03.2021 (Rupees in thousands) | Balance 2021-2022 (Rupees in thousands) | Amount Requested for 2021-2022 (Rupees in thousands) |
|---|---|---|---|---|
| Construction of Government industrial Training Institute Building for Scheduled Tribes Students at Anaikatti in Coimbatore District | 14987 | 3355 | 11632 | 11632 |
| Construction of New ITI building for Schedule Tribes students at Gudalur (Uppatti) in Nilgiris | 16735 | 9984 | 6751 | 6751 |
| Construction of compound wall. Power room and interior electrical work in Government ITI Jamunamarathur in Thiruvannamalai. | 6740 | 6732 | 8 | 0 |
| Construction of building for Government Industrial Training Institute at Kollihills in Namakkal | 57200 | 11999 | 45201 | 45201 |
| **Total** | **95662** | **32070** | **63592** | **63584** |

எனவே, மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு 2020-2021 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 9,56,62,000/- (ரூபாய் ஒன்பது கோடியே ஐம்பத்து ஆறு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரம் மட்டும்) தொகையிலிருந்து ரூ.3,20,70,000/- (ரூபாய் மூன்று கோடியே இருபது இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) செலவீனம் செய்யப்பட்டு மீதமுள்ள தொகை ரூ.6,35,92,000/-இல் வரையறை செய்யப்பட்டு ரூ.6,35,84,000/- (ரூபாய் ஆறு கோடியே முப்பத்தி ஐந்து இலட்சத்து எண்பத்தி நான்காயிரம் மட்டும்) 2021-2022-ஆம் ஆண்டு விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு பழங்குடியினர் நல இயக்குநர் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்காணும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்ததன் அடிப்படையில், 2021 – 2022 ஆம் ஆண்டு விரிவான பழங்குடியின மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆனைக்கட்டி, கூடலூர், கொல்லிமலை ஆகிய 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்கு ரூ.6,35,84,000/- (ரூபாய் ஆறு கோடியே முப்பத்தி ஐந்து இலட்சத்து எண்பத்தி நான்காயிரம் மட்டும்)க்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசாணையிடுகிறது.

| வ. எண் | ITI தொழிற்பயிற்சி நிலையங்கள் | நிதி ஒதுக்கீடு தொகை ரூபாய் இட்சத்தில் |
|---|---|---|
| 1 | ஆனைக்கட்டி | 116.32 |
| 2 | கூடலூர் | 67.51 |
| 3 | கொல்லிமலை | 452.01 |
| | **மொத்தம்** | **635.84** |

(ரூபாய் ஆறு கோடியே முப்பத்தி ஐந்து இலட்சத்து எண்பத்தி நான்காயிரம் மட்டும்)

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"4225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு -02 பழங்குடியினர் நலன் – 796 பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – மாநிலச் செலவினங்கள் – JA விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – 416 பெரும்பணிகள்"
IFHRMS த.தொ.கு.4225 02 796 JA 41602

6. மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினை பெற்று முதன்மை தலைமை பொறியாளர் (கட்டிடம்), பொதுப்பணித்துறைக்கு வழங்க பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

7. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 7909/நிதி (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்)/2022, நாள் 18.02.2022-இல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
முதன்மை தலைமை பொறியாளர் (கட்டிடம்),
பொதுப்பணித்துறை, சென்னை – 600 005.
ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,
கிண்டி, சென்னை-600 032,
மாவட்ட ஆட்சியர்கள்
கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் நாமக்கல்
திட்ட அலுவலர், நாமக்கல்,
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், கோயம்புத்தூர், நீலகிரி.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-600 018/600 035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-600 008.
நகல்
நிதி (ஆதி(ம)பந / வ.செ.பொது-II] துறை, சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந5/அநமு1)துறை, சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
முதன்மை செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை-600 009.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

22/2/2022
பிரிவு அலுவலர்
22/02/2022